**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 13-05-2022**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-05-13 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-05-14 | 2022-05-15 | 2022-05-16 | 2022-05-17 | 2022-05-18 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ) | 0.0 | 4.0 | 10.0 | 3.0 | 0.0 |
| டிமாக்ஸ் (° C) | 36.0 | 34.0 | 33.0 | 33.0 | 35.0 |
| டிமின் (° C) | 27.0 | 25.0 | 24.0 | 24.0 | 26.0 |
| RH I (%) | 80 | 85 | 85 | 85 | 80 |
| RH II (%) | 60 | 70 | 70 | 70 | 60 |
| காற்றின் வேகம் (கிமீ) | 12.0 | 12.0 | 12.0 | 12.0 | 8.0 |
| காற்று இயக்கம் (பட்டம்) | 250 | 250 | 290 | 290 | 160 |
| மேகக்கணி (ஆக்டா) | 4 | 7 | 7 | 7 | 4 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் லேசான முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 33.0°C - 36.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 24.0°C - 27.0°C வேறுபாட்டிலும் இருக்கும். பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் . காற்றின் வேகம் மணிக்கு 08 - 12 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : மே 18 முதல் மே 24 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில் இயல்பிற்கு மேல் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை இயல்பிற்கு மேல் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும்

## எஸ்எம்எஸ் ஆலோசனை:

கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேல் உள்ள வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுக்கவும் .

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நிலக்கடலை | எதிர்பார்க்கும் மழையை பயன்படுத்தி நடப்பு சித்திரை பட்டத்தில் மானாவரியாக நிலக்கடலை தரணி இரகத்தை விதைப்பு மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.விதைப்புக்கு முன் நிலக்கடலை விதையுடன் ஒரு கிலோ விதையுடன் 4 கிராம் டிரைகோடெர்மா விரிடியைக் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் இளம் பருவத்தில் வரும் வேர் அழுகல் நோய்களை கட்டுப்படுத்தலாம். |
| கருப்பு கிராம் | வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர் வகை பயிருக்கு நீர் பாய்ச்சுவதை தள்ளிப்போடவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | எதிர்பார்க்கும் லேசான மழையை முதல் மிதமான மழை பயன்படுத்தி வாழை வளரும் பருவம் வாழை நடவு செய்து 5 மாதம் முடிவடையும் தருவாயில் உள்ள செடி ஒன்றுக்கு தலா 20 கிராம் என்ற அளவில் அசோஸ்பைரில்லம் + பாஸ்போ பாக்டீரியா கலந்து இடவேண்டும். |
| தேங்காய் | தென்னையில் ஒவ்வொரு அறுவடைக்குப் பிறகு நுனி வளைந்த கம்பி மூலம் காண்டாமிருக வண்டினை சேகரித்து அளிக்கவும் .ஒரு மரத்திற்கு மூன்று நாப் தலின் உருண்டையுடன் 100 கிராம் மணல் கலந்து மரத்தின் கொடைப்பகுதியில் வைத்து கட்டுப்படுத்தலாம் . |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கோடை மழை பயன்படுத்தி கால்நடை வளர்க்கும் விவசாயிகள் பசு தீவன புற்கள் நடவு செய்வதற்கான பசு தீவன பண்ணையை தயார் செய்யவும் . 10 சென்ட் மாதிரி பண்ணையில் 4 சென்டில் புற்கள்(கோ -4 ) 3 சென்டில் தானிய வகை பசு தீவனம்( கோ எப் எஸ் 29/ கோ எப் எஸ் 31) 3 சென்டில் பயிறுவகை பசுந்தீவனம் (வேலி மசால் ,காராமணி ) பசு தீவன பண்ணையை சுற்றிலும் தீவன மரங்கள் (சுபாபுல் ,அகத்தி ) போன்றவற்றை பயிர்செய்யவும் . |
| பசு | அடுத்த சில தினங்களுக்கு இடி ,மின்னலுடன் கூடிய லோசனமுதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் .விவசாயிகள் தங்கள் கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கட்டி வைக்கவும் .மேலும் மின் கம்பம்,தொலைபேசி கம்பம் மற்றும் மரத்தடிகளில் கால்நடைகளை கட்டுவதை தவிர்க்கவும் . |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சிக் | மழை எதிர்பார்க்கப்படுவதால் புறக்கடை கோழி வளர்ப்பு கோழிகள் தேங்கியிருக்கும் மழை நீரை குடிக்க மால் பார்த்துக்கொள்ளவும் . ஏனெனில் இது ஒட்டுண்ணி தாக்கத்தை ஏற்படுத்தும். கால்நடை வளர்க்கும் கொட்டகைகளில் சுற்றியுள்ள தேவையற்ற செடிகளை சுத்தமாக வைக்க வேண்டும்.இது நல்ல காற்றோட்ட வசதி தருவது மட்டுமல்லாமல். ஒட்டுண்ணிகள் இடைநிலை இடைநிலை பருவத்தை அழிக்க உதவும். கோழிகளுக்கு பி-காம்ப்லெக்ஸ்திரவத்தினை குடி நீருடன் கலந்து அளிப்பதால் வெப்ப தாக்க அழற்சியை குறைக்கலாம். வெப்ப அழுத்தத்தை சமாளிக்க கோழி கொட்டகையின் ஒரு அலகு (யூனிட் ) பகுதியில் பறவைகளின் எண்ணிக்கையை குறைத்து வைக்கும்படி விவசாயிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | கோடை மழை நிலத்தடியில் சேமிக்கவும், பயிர்க் கழிவுகளை மறுசுழற்சி செய்யவும்.அறுவடை செய்த மற்றும் தரிசு நிலங்களில் சரிவுக்கு குறுக்காக மண்ணை புரட்டும் கலப்பை கொண்டு உழவு செய்யவும் . |
| நில தயாரிப்பு | எதிர்ப்பார்கும் கோடை மழையை பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் நிலங்களில் கோடை உழவினை மேற்கொண்டு ஒரு ஏக்கருக்கு வேளாண் பயிர்க்கு 5டன் மக்கிய தெழுஉரம் .தோட்டக்கலை ஒரு ஏக்கருக்கு 10 டன் மக்கிய தெழு உரம் அடியுரமாக போடுமாறு கேட்டு கொள்ளப்படுகிறது. மேலும் வரப்புகளை அமைத்து பெய்யும் மழையை சேமித்து பயன்படுத்துமாறு கேட்டு கொள்ளப்படுகிறது. |
| பொது ஆலோசனை | எதிர்பார்க்கும் மழையை பயன்படுத்தி நெல் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் காய்கறிகள் ,தென்னை பயிர் செய்ய நிலம் தயார் செய்ய இதுவே ஏற்ற தரும் . மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் உரமிடுதல் ,பூச்சி மருந்து மற்றும் களைக்கொல்லி தெளிப்பது தவிர்க்கவும்.மழைநீர் தேங்காத வண்ணம் நல்ல வடிகால் வசதி அமைத்து கொடுக்கவும் . |